செ.வெ.எண்.616 நாள்.04.12.2017

**காஞ்சிபுரம் மாவட்டம்**

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை சார்பில் ‘‘ஒழுங்கு நடவடிக்கைகள்’’ மற்றும் ‘‘ அலுவலக நடைமுறைகள்’’ குறித்த பயிற்சி – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

***********

தமிழ்நாடு அரசின் பணியாளர் நிருவாகச் சீர்த்திருத்தத் (ஆய்வு–3) துறையின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பணிபுரியும் நேர்முக உதவியாளர்கள்/நிர்வாக அலுவலர்கள் நிலையிலான அலுவலர்களுக்கு ‘ஒழுங்கு நடவடிக்கைகள்’ குறித்த முன்னோடி பயிற்சி 04.12.2017 மற்றும் 05.12.2017 ஆகிய இரண்டு நாட்களும் கண்காணிப்பாளர் நிலையிலான அலுவலர்களுக்கு ‘அலுவலக நடைமுறைகள்’ குறித்த குறுகிய கால பயிற்சி 06.12.2017 முதல் 08.12.2017 வரை மூன்று நாட்களும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறுகிறது.

இப்பயிற்சியை தொடங்கி வைத்து பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர்,

அரசு அலுவலர்கள் ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றம் அலுவலக நடைமுறைகள் குறித்து அறிந்திருந்தாலும் இடைவெளி இல்லாமல் தொடர்ந்து பணியாற்றி வரும்போது அரசினால் அவ்வப்போது வழங்கப்படும் உத்தரவுகள் மற்றும் ஆணைகளை அறிந்து செயல்படும் வகையில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அலுவலர்கள் இது குறித்து விரிவாக அறிந்து கொண்டு செயல்படும் வகையில் இப்பயிற்சியை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.A.நூர்முகம்மது, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (ஆய்வு–3) துறையின் மாவட்ட வருவாய் அலுவலர்/அலுவலர் (பயிற்சி இயக்குநர்) திரு.சா.ரெகொபெயாம், பிரிவு அலுவலர், திரு.ப.ஜெகதீஷ், பயிற்சியாளர் திரு.பாலசுப்ரமணியன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.மு.விஜயகுமாரி, துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.இரா.லட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.